# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற அவசரக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 14.09.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

**பொருள் எண். 1**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த கீழ்க்கண்ட சாலை பணிகளை 3 சிப்பங்களாக ரூ.482.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (IUDM) 2020–21–ன் கீழ் பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1094, நாள்.30.04.2020–ன்படி நகர்மன்ற ஒப்புதல் பெற்று உரிய நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.303, நாள்.09.09.2020–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | I | 1, 5 & 17 | மேல்அயனம்பாக்கம் பச்சையப்பன் நகர் வசந்தா தெரு, திருவள்ளுவர் தெரு, பெருமாள் கோயில் தெரு, அக்ரஹாரம் தெரு, கஸ்தூரிபாய் நகர் மற்றும் அரவிந்த நகர் பகுதிகளுக்கு தார்தளம் அமைத்தல். | 2.305 | 131.00 |
| 2 | II | 8, 9 & 14 | நூம்பல் ஜட்ஜஸ் காலனி, நூம்பல் தேவி கருமாரியம்மன் நகர் பிரதான சாலை, நூம்பல் கிருஷ்ணா நகர், நூம்பல் பாலாஜி நகர் மற்றும் கே.என்.வி நகர் 1வது, 2வது தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 2.322 | 163.00 |
| 3 | III | 15 | நடேசன் நகர், அன்னை வித்யாஷிரமம் பள்ளி தெரு, செல்வகணபதி நகர், ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர் பிரதான சாலை, அபிராமி நகர் 5வது தெரு, மகாலட்சுமி நகர் மற்றும் கருமாரியம்மன் நகர் விரிவு பகுதிகளுக்கு தார்தளம் அமைத்தல். | 2.740 | 181.50 |
| | | | **மொத்தம்** | **7.367** | **475.50** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற அரசாணையின்படி கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்ட உத்திரவு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பணியின் விபரம் | மொத்த மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | Apprisal Cost (Rs.in Lakhs) | IUDM Share Cost (Rs.in Lakhs) | ULB Share Cost (Rs.in Lakhs) |
|---|---|---|---|---|
| Package -1 | 131.00 | 131.00 | 104.80 | 26.20 |
| Package -2 | 167.00 | 163.00 | 130.40 | 32.60 |
| Package -3 | 184.00 | 181.50 | 145.20 | 36.30 |
| **Total** | **482.00** | **475.50** | **380.40** | **95.10** |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ) மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசரானை வழிகாட்டுதலின்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரத்தினை ஏற்று, நகராட்சி பங்களிப்பினை ஈடு செய்திடவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய தொழில்நுட்ப அனுமதி கோரி கருத்துருவினை மேலனுப்பிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1228 அனுமதிக்கப்பட்டது.

---

**<u>பொருள் எண். 2</u>**

திருவேற்காடு நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட அலுவலகத்தில் தானியங்கி **சானிட்டைசர்** இயந்திரம் அமைக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | கொள்முதல் | தொகை |
|---|---|---|---|
| 1 | Phoenix Global Ventures No. 2B, 2nd Floor, CIT Colony, 1st Main Road, Mylapore, Chennai-4 | திருவேற்காடு நகராட்சி அலுவலகத்திற்க வரும் பொது மக்கள் கைகளை கழுவி உள்ளேவரவும் கொரோனா வைரஸ் நோய் தடுத்திட தானியங்கி சானிட்டைசர் இயந்திரம் சப்ளை செய்தல் | ரூ.16,200/– |
| | | | ரூ.2000/ |
| 2 | Hi Tech Green India No. 5/3 , 2ª, Sri Sakthi Krishna Nagar Apartments CIT colony, 1 St Main Road, Mylapore, Chennai -4. | | ரூ.17112/ |
| | | | ரூ.2242/ |
| 3 | United Trading Company, No.25, Mandabam Road, Kilpauk, Chennai-10. | | ரூ.16500/ |
| | | | ரூ.2140/ |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய **Phoenix Global Ventures** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் ஆணையர் அவர்களின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதிகலாம் .

தீர்மானம் எண். 1229 (1) ம (2) அனுமதிக்கப்பட்டது.

---

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

**<u>பொருள் எண்.3</u>**

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (ஊடிஎனை 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் **லைசால்** என்னும் கிருமி நாசினி இருபக்கமும் தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர், மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சியில் போதிய அளவு **லைசால்** இருப்பு இல்லாததாலும் மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பணியின் அவசர அவசியத்தை கருதியும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1176, நாள்.30.06.2020–ல்

அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **லைசால்** கிருமி நாசினி **2500 லிட்டர்** சப்ளை செய்ய உத்திரவு வழங்கவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண். 1230 பதியப்பட்டது.

---

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிகமாக பரவி வருவதால் நோயினை கட்டுப்படுத்தும் பொருட்டு பல்வேறு பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் உத்திரவு ந.க.எண். 939/2020/ஆ7/உ.இ.(ஊ) நாள். 27.07.2020 –ன்படி நகராட்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கொரோனா பரிசோதனை முகாம்கள் தினசரி நடத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நடமாடும் கொரோனா பரிசோதனை வாகனங்கள் இரண்டு ஏற்பாடு செய்ய நகராட்சியில் உள்ள பொது சுகாதார பயன்பாட்டில் உள்ள டாடா ஏஸ் வாகனங்கள் இரண்டினை கொரோனா தடுப்பு பரிசோதனை வாகனங்களாக மாற்றி பயன்பாட்டில் கொண்டுவர பணிகள் மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 28.08.2020 குறிப்பினை தொடர்ந்து, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கென செலவீனத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.3582/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 1231 அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட **லைசால்** கிருமி நாசினி கொரோனா பாதித்த பகுதிகளில் தெளிக்கவும் **லைசால் 2500** சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி** | **பணியின் விவரம்** | **கொள்ளளவு** | **தொகை** |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் நுஒportor and Distributors No. 9-5-1.பஜார் தெரு, முதல் மாடி, அய்யம்பாளையம், திண்டுக்கல். பின்கோடு –624204. | பொது சுகாதாரம் கொரோனா பாதித்த பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க லைசால் சப்ளை | 1 லிட்டர் | ரூ.280/– |
| 2. | ஸ்ரீ விநாயகா பார்மா, எண். 33, வெங்கட்ட ரமணன் தெரு, பொள்ளாச்சி கோயம்புத்தூர், பின்கோடு– 642001. | | 1 லிட்டர் | ரூ.320/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதி வழங்கலாம்.**

தீர்மானம் எண். 1232) அனுமதிக்கப்பட்டது.

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**/உண்மை நகல்/**
**ஆணையர்**
**திருவேற்காடு நகராட்சி.**